# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 812/ந/2019**

**நாள் : 20/01/2020**

**உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம்,**
**செங்கல்பட்டு மண்டலம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு சு.சுகுமார்,**
**நகரமைப்பு ஆய்வாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரிடமிருந்து பெறப்பட்ட முகவரி, நாள் மற்றும் கையொப்பமிடபடாத மனு சம்பந்தமாக செம்பாக்கம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் திரு சு. சுகுமார் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரிடமிருந்து முகவரி, நாள் மற்றும் கையொப்பமிடபடாத மனு ஒன்று இம்முறைன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனுவில் செம்பாக்கம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரியும் திரு சு. சுகுமார் அவர்கள் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து, அவரை பணியிடை நீக்கம் செய்யக்கோரி முறையீடு செய்யப்பட்டுள்ளது.

1. ஊட்டி நகராட்சியில் பணிபுரியும் பொழுது விதிகளை மீறி கட்டட அனுமதி வழங்கியது மற்றும் கையூட்டு பெறும் பொழுது லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளின் நடவடிக்கைக்கு உட்பட்டது ;
2. ஊட்டியில் பல ஏக்கர் நிலங்கள் வாங்கிக் குவித்தது ;
3. எதிர் மனுதாரர் தனக்கென ஒரு அலுவலகம் வைத்து கொண்டு, தனது மைத்துனர் பரிந்துரை செய்யும் நேர்வு சம்பந்தப்பட்ட கோப்புகளில் கையெழுத்திடுவது ;
4. தொல்லியல் துறை தடை செய்த பகுதி, சாலைகள் இல்லாத பகுதி மற்றும் அரசு நிலங்கள் ஆகியவற்றில் கட்டும் கட்டடங்களுக்கு கட்டட அனுமதி வழங்கியது ;
5. பொள்ளாச்சி, கோயம்புத்தூர், ஆவடி செம்பாக்கம் மற்றும் வேளச்சேரி பகுதிகளில் சொத்துக்கள் வாங்கியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட புகார்கள் குறித்து எதிர் மனுதாரர் திரு சு. சுகுமார் அவர்களிடம் 09.01.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தான் ஊட்டி நகராட்சியில் பணிபுரியவில்லை என்றும், லஞ்ச ஒழிப்புத் துறையினர் தன் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று விசாரணையின்

போது தெரிவித்தார். மேலும், குற்றச்சாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சிப் பகுதிகளில் சொத்துக்கள் ஏதும் இல்லை என்றும் தெரிவித்தார். தான் உடல் நிலை சரியில்லாமல் இருப்பதால் தனது மைத்துனர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்வார் என்று தனக்கு உதவியாளர் யாரும் இல்லை என்றும் தெரிவித்தார். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் கைப்பேசி எண்ணைத் தவிர மற்ற விவரங்கள் உண்மைக்குப் புறம்பானது என்றும் தெரிவித்தார்.

3. எதிர் மனுதாரரான செம்பாக்கம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு சு. சுகுமார் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், குற்றச்சாட்டு மனுவில், மனுதாரரின் முகவரி, நாள் குறிப்பிடப்படாததுடன் கையொப்பம் இடப்படாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட மனு ஆதாரமற்ற மனு எனக் கருதி இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2020–ஆம்** ஆண்டு, ஜனவரி திங்கள், **20–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 28-1-20.

28.1.2020

28/1/2020

**பெறுநர்**

1. திரு சு. சுகுமார்,
நகரமைப்பு ஆய்வாளர்,
செம்பாக்கம் நகராட்சி,
**செம்பாக்கம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி,**
**செம்பாக்கம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**